Asst. Librarian
PERIODICALS DIVISION
1994

News and Articles in Tamil and English Please send them to:

THE EDITOR,
The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka
Under No.Q / J / 104 / News / 89
Established : 1841 : A Christian Weekly : Published Every Friday
Vol: 155 Jaffna, Friday 16, December 1994 No. 32

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island : Rs.100/-
For Advertisements
Apply to:
THE MANAGER
The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

## CAROL SERVICE BY THE JAFFNA DIOCESE OF THE CHURCH OF SOUTH INDIA

Mabel Thambiah Hall of the Vembadhi Girls' High School was the venue of the Carol Service conducted by the Jaffna Diocese of the Church of South India. The Choirs of Jaffna College, Uduvil Girls' College and Christian Theological Seminary gave their very best to make this service a bright and meaningful one. Mabel Thambiah Hall was packed to capacity. The Service commenced with an organ prelude given by Jaffna College. Rev. D. S. Thiagarajah, Principal of Christian Theological Seminary, Maruthanamadam offered the bidding prayer. The First lesson was read by Mr. G. Rajanayagam, Principal, Jaffna College Then the choir of Uduvil Girls' College sang the following Carols. "This is a time for celebration, Somebody has to tell, No Royal Band, He brought joy & Come let us." They also rendered a Tamil carol set to classical carnatic music. Christian Theological Seminary's contribution was pure carnatic music. The poetry and the music was of a very high order. The second lesson was read by Miss C. V. Selliah, Principal, Uduvil Girls' College. The Bishop Rt. Rev. Dr. S. Jebanesan gave the Christmas Message. "Fear Not" was the subject of his address. Jaffna College then performed the Christmas Cantata - "Emmanuel". Rt. Rev. D. J. Ambalavanar pronounced the benediction.

## Letter to the Editor

Dear Sir

In connection with the reference made by Mr. A. Gunanayagam to Dr. H. Harrison in his article about missionaries reproduced in the Morning star of 14th October 94, I wish to add my humble contribution to the memory and glory of the late Dr. Harrison.

Dr. M. H Harrison taught Latin and Logic at Jaffna College in the nineteen twenties and left at the end of 1929 to become the Principal of Bangalore Theological College. For some time he was acting Principal at Jaffna College during the furlough of Rev. John Bicknell.

In teaching Latin, Dr. Harrison's objective was to make the students proficient in the language and not merely to pass the examination. When two alternate text books were prescribed by the University, Dr. Harrison proposed, to the utter dismay of the students, that he would teach both the text books, one for the first half of the year and the other for the second half of the year. The students of course preferred to study only one book and do it thoroughly so that they could get a good pass in the subject. But nobody dared to oppose or confront Dr. Harrison

(Continued on page 4)

## Librarian's post not filled

The post of Librarian at the University of Jaffna has been vacant for the past seven months. The University Grants Commission and the University Council of Jaffna have not yet resolved the conditionalities regarding this appointment.

## The price of salt

The Salt producing agency of the North has determined the price of salt as follows:

Wholesale price of salt-
1 kg. - Rs. 10/-
Retail price of salt-
1 kg. -Rs. 12/50

## V. Veerasingham remembered

Mr V Veerasingham who contributed much to the development of the co-operative movement in Jaffna was remembered by the people on Monday the 5th December. The day was observed as V. Veerasingham Day by the Co-operative societies. Special supplements were issued in the local newspapers.

## Jaffna University Medical Graduates reluctant to Serve in Jaffna

The Medical Faculty of the University of Jaffna has expressed dis-satisfaction that most of the doctors trained in the Jaffna University are reluctant to serve in the North. They all aspire to serve in South Sri Lanka. The Medical Faculty has also said that next year there will be an acute shortage of Medical personnel in Jaffna. The Medical Institutions of the South are heavily overstaffed.

## 'Morning Star' Subscribtion dues

Dear readers,

I wish to remind you that our Annual accounts for this year will be closed on 31st December 1994. Therefore those of you who have not yet paid your contributions upto December, 1994 are kindly requested to pay up your arrears. However we shall continue sending our papers upto February 1995 and shall stop there after to those who have not settled their dues.

Manager
Morning Star

## Ten delegates to participate in the International Tamil Research Conference

Ten members of the World Tamil Cultural Movement (Sri-Lanka Branch) will participate at the IATR Conference which will commence at Thanjavoor on the 5th of January 1995.

## Service of Thanksgiving

A Service of Thanksgiving for the life and work of Mr. M. Thambithurai was conducted on Saturday the 3rd December at 4.00 p. m. at the C. S. I. Church Uduvil. The Rt. Rev. Dr. S. Jebanesan led the service, assisted by the Revds. A. Jeyakumaran and B. J. Mather. A special order of service was followed. Lessons were read by Mr. A. Y. Rajaratnam and Miss Anuja Thambithurai (daughter of the late Mr. M. Thambithurai). A special devotional song was sung by Mrs. Thaya Thiagarajah. Mr. A. Kadirgamar paid the tribute. He gave a detailed account of the life and work of the late Mr. Thambithurai since his conversion to Christianity at his early life, and his devoted service to the Jaffna community after his commitment to the Christian faith Mr. Kadirgamar mentioned that Mr. Thambithurai had been a

(Continued on page 4)

## Prizes of the Sahithiya Academy

The Hindu Cultural Affairs Ministry has announced the Sahithiya Academic Prizes for the year 1992. The following are the winners.

1. Drama:- N. Tharmarajah — "Anril Paravaihal"
2. Short Story:- Saddananthan — "Ula"
   :- S. L. M. Haniffa — "Makkathu Salvai"
3. Poetry:- E. Murugaiyan — "Naangal Manithar"
4. Literary Criticism:- Dr. C Mounaguru "Palayathum Puthiyathum"
5. Childrens' Literature:- E. Ambikaipakan — "Konchum Thamil"
6. Religion & Philosophy:- Dr. K. Arunasalam "Swamy Vipulanantharin Samaya Sinthanaikal"
7. Local History & Culture:- A. N. M. Sajahan "Puttalam Varalarum Marapukalum"

The awards will be given at the Sahithiya Academy Prize Day in December 1994.

# செய்திச் சிதறல்

## சமாதானபுரம் நிகழ்வுகள்

கடந்த 18. 10. 94 அன்று சமாதானப்புரம் சபை ஞாயிற்றுக் கிழமை ஆராதனையில் சேகரக்குரு அருட்திரு T. தேவநேசன் போதகரால் 6 பேருக்கு குடும்பமாக ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது

—

கடந்த 18.11.94 அன்று சமாதானபுரம் சபையின் பகல் பராமரிப்பு நிலையப் பிள்ளைகளின் வருடாந்த ஒளிவிழா நிகழ்ச்சிகள் நடைப்பெற்றன. காலை 10மணிக்கு அருட்திரு T. H. வசந்தகுமார் போதகரின் ஜெபத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. போரூட் நிறுவன பணியாளர்கள் Forut செல்வி ஸ்ரெலா யேக்கப்,செல்வி அக்குலின் திரு சாந்தலிங்கம் ஆகியோரும் அக்கரயான் கிராம சேவகர் திரு. வேலுப்பிள்ளையும் கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டனர்,

நிகழ்ச்சிகளுக்கு ஜி. டி. மைனசிலன் போதகர் தலைமை தாங்கினார். பகல் பராமரிப்பு நிலைய ஆசிரியைகள்செல்வி உதயா,செல்வி லூர்த்தம்மா ஆகியோர் நிகழ்ச்சிகளை மிகச் சிறப்பாக பழக்கியிருந்தனர். நிகழ்ச்சிகளின் முடிவில் 70 பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. மாலை 1 மணிக்கு ஜெபத்துடன் ஒளிவிழா இனிதே முடிவுற்றது.

## கோனாவில்சபை நிகழ்வுகள்

கடந்த 6, 8. 94 அன்று கோனாவில் தென் இந்திய திருச்சபையின் பகல் டராமரிப்பு நிலைய பிள்ளைகளின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நடைப்பெற்றது. மாலை 3.00 மணிக்கு அருட்திரு. P. R. நவீந்திரனுகூலன் அவர்கள் சபையின் கொடியை ஏற்றிவைத்ததுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின நிகழ்ச்சிகளின் முடிவில் 35 பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

—

கடந்த 8, 10 94 சனிக்கிழமை அன்று புனித தோமாவின் நினைவு நாளையொட்டி கோனாவில் சபையின் 7வது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. காலை 10 மணிக்கு சேகரக்குரு அருட்திரு P. R. நவீந்திரனுகூலன் அவர்களினால் திருவிருந்து ஆராதனை நடத்தப்பட்டது. அருட்திரு தேவருட்செல்வம் போதகரும் ஜி.டி மைனசிலன் போதகரும் திருவிருந்தில் உதவினர். ஆராதனையின் பின் ஆண்டுவிழாவில் கலந்து கொள்ள வந்த யாவருக்கும் மதிய உணவு பரிமாறப்பட்டது. மாலை 1 30 மணிக்குச் சபையின் கொடியினைசேகரக்குரு ஏற்றிவைத்தார் பின் தேவருட்செல்வம் போதகரின் ஜெபத்துடன் கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின சபைப்போதகர் ஜி. டி. மைனசிலன் நிகழ்ச்சிகளுக்கு தலைமை தாங்கினார். சமாதானப்புரம் சபை வாலிபர்களும் சாலோம் நகர் சபை இல்ல மாணவர்களும் கோனாவில் சபை வாலிபர்களும் நாடகங்கள் அரங்கேற்றினார்கள். சமாதானப்புரம் சபை ஓய்நாட் பாடசாலைப் பிள்ளைகளும் கோனாவில் சபை ஓய்வு நாட் பாடசாலைப் பிள்ளைகளும் நடனங்கள் அரங்கேற்றினார்கள் சபைப் போதகரின் நன்றியுரையுடனும் ஜெபத்துடனும் மாலை 4.30 மணிக்கு விழா இனிதே முடிவுற்றது.

## நினைவு தின விழா

யாழ் மாவட்ட கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் அவர்களின் நினைவு தின விழா யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு முன்னாலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையால் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்த நினைவு விழாவில் அமரர் வீரசிங்கம் அவர்கள் கூட்டுறவில் ஆற்றிய பணியில் குறித்த விரிவான நூலொன்று வெளியிடப்பட்டது: இவ்விழாவில் பலர் சொற்பொழிவாற்றினார்.

## தென்னங்கன்று விநியோகம்

யாழ்ப்பாண பிரதேச செயலகம் 500 நல்ல இன தென்னங்கன்றுகளை கிராம சேவையாளர்கள் ஊடாக விநியோகஞ் செய்து வருகிறது. இத்துடன் நல்ல மரக்கன்றுகளையும் விநியோகஞ் செய்து வருகிறது.

## மேலதிக உணவு முத்திரை

ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 5 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட பாடசலை செல்லும் மாணவ மாணவியருக்கும் 1994ஆம் ஆண்டுக்கான மேலதிக உணவு முத்திரைகளை வழங்க பிரதேச செயலாளர்கள் அவ்வப் பகுதி கிராம சேவை உத்தியோகத்தர் மூலம் நடவடிக்கை எடுக்கலாம்.

வருமானம் கூடிய குடும்பத்திலுள்ள மாணவருக்கும் இடம் பெயர்ந்த மாணவர்களுக்கும் மேலதிக உணவுமுத்திரைகள் வழங்கப் படவிருக்கிறது. பிரதேச செயலக எல்லைக்குட்பட்டவருமானம்கூடிய குடும்பங்களும் இடம் பெயர்ந்த குடும்பங்களும் தமது பகுதி கிராம சேவை உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப் பட்டுள்ளனர்.

## செயன் முறைப் பரீட்சை

1994ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சங்கீதம் நடனம், ஆகிய பாடங்களுக்குத் தோற்றிய பரீட்சாதிக்கான செயன் முறைப் பரீட்சைகள் கடந்த 28ம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கிறன.

நடனம் யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் சங்கீதம் நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலையிலும் நடைபெறுமென்று கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

## குறுகிய கால பயிற்சி

திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் குறுகிய கால பயிற்சி வகுப்புக்கள் டிசம்பர் மாதம் நடுப் பகுதியில் ஆரம்பமாகவுள்ளன,

டிசம்பர் ம தம் 12ம் 13ம் திகதிகளில் இயற்கைப் பசளை சம்மந்தமான பயிற்சி வகுப்பும் டிசம்பர் 19ம் திகதி மரக்கறி நாற்றுமேடை பயிற்சி வகுப்பும் டிசம்பர் 26ம் திகதி மிளகாய் செய்கை தொடர்பான பயிற்சி நெறியும் நடைபெறவிருக்கிறது

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் பயிற்சியாளருக்கு நாள் ஒன்றுக்கு 20 ரூபா ஊக்குவிப்புப் படியாக வழங்கப்படும் என்று விவசாய பயிற்சி நிலைய உதவி விவசாயப் பணிப்பாளர் திரு, ச. சின்னத்துரை தெரிவித்தார்.

## ஆக்க இலக்கிய பரிசுகள்

யாழ்ப்பாண இலக்கிய வட்டத்தின் இலக்கிய பேரவையால் 1993ம் ஆண்டுக்கான ஆக்க இலக்கியப் பரிசுகளுக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள நூல்களின் விபரங்கள் யாழ் இலக்கிய வட்டத்தினரால் வெளியிடப்பட்டுள்ளன.

பரிசு பெறும் நூல்களும் அவற்றை எழுதியோர். விபரமும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு:-

இலக்கியம்:- 'ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு எழுதியவர் கலாநிதி சி, மௌனகுரு

நாவல்:- போர் உலா

எழுதியவர்:- மலரவன்

சிறுகதை:- யாழ்ப்பாணத்து இராத்திரிகள்

எழுதியவர்:- செங்கை ஆழியன்

கவிதைத் தொகுதி:- நினைவழியா நாட்கள்

எழுதிவர் புதுவை இத்தினதுரை

காவியம்: கவேரி

எழுதியவர்' காரை. செ. சுந்தரம் பிள்ளை

நாடகம்: கோலங்கள் ஐந்து

எழுதியது: ஐவர்

சிறுவர் இலக்கியம் குழந்தைப் பாடல்

எழுதியவர்: வாகரை வாணன்

பல்துறை: பூநரி நொய் பொரு ஆய்வு

எழுதியவர்: ப. புஸ்பரத்தினம்

சமயம்: மலைய மக்களின் சமைய நம்பிக்கை:

எழுதியவர்: கலாநிதி அ. வேல்முருகு

அறிவியலுக்கான பரிசு நூல் எதுவும் இல்லை.

மேற்படி நூல்களை எழுதியவர்களுக்கான பரிசளிப்பும் சான்றிதழ் வழங்கும் வைபவம் டிசம்பர் மாதம் 18-ம் திகதி நடைபெறவுள்ளது.

## நிறுவகர் சிலை திறப்பு

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் நிறுவுனர் நினைவு நாளை முன்னிட்டு சேர். பொன் இராமநாதனின் உருவச்சிலையை கல்லூரி அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற விழாவின் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திறந்து வைத்தார்.

யாழ். இராமநாதன் நுண்கலைக் கழகப் பீடாதிபதி கலாநிதி சபா. ஜெயராசாவும்' முன்னைநாள் வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் ஆகியோர் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். கலைப்பீடாதிபதி கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை நிறுவுனர் நினைவுநாட் பேருரையை நிகழ்த்தினார்.

## ஒளிவிழா

யாழ்ப்பாண வை. எம். சி. ஏ ஸ்தாபத்தின் ஆதரவி நடைபெறும் ஐந்து பாலர் பாடசாலைப் பிள்ளைகள் கலந்து கொண்ட ஒளிவிழா யாழ்ப்பாணம் வை எம் சி ஏ மண்டபத்தில் அருட்திரு எஸ் பி நேசகுமார் அடிகளாரின் ஜெபத்துடன் கடந்த சனிக்கிழமை மாலை 2 30 மணியளவில் ஆரம்பமாகியது

பாடசாலை பிள்ளைகளின் கலை நிகழ்சிகள் நடைபெற்றன, காந்தி பாலர் பாடசாலைப் பிள்ளைகள் நடித்த 'பெத்தகேமில் பெருவிழா' என்ற நாடகமும் கலைமகள் பாலர் பாடசாலைப் பிள்ளைகள் நடித்த கிராமிய நடனமும் எல்லோருடைய பாராட்டையும் பெற்றன

பாலர் பாடசாலைக்கிடையில் நடைபெற்ற பேச்சுப் போட்டி பாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வை எம் சி ஏ தலைவர் வைத்திய கலாநிதி ரீ டபிள்யு ஜெயகுலராஜா வழங்கினார்கள். பாடசாலை பிள்ளைகளுக்கு பரிசில்களும், சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன, வரவேற்புரையை திருமதி இ. வரதராஜாவும் நன்றியுரையை செல்வி பு.மார்க்கண்டும் கூறினார்கள்.

## பாலர் பாடசாலை ஒளி விழா

நல்லூர் பரியாக்கோபு ஆலய பாலர் பாடசாலையின்'ஒளி விழா' கடந்த வெள்ளிக்கிழமை ஆலய ஜெப மண்டபத்தில் அருட்திரு. எஸ். பி. நேசகுமார் அடிகளின் ஜெபத்துடன் ஆரம்பமாகியது.

பாலர் பாடசாலைப் பிள்ளைகளின் கலை நிகல்ச்சிகள் இடம் பெற்றன. ஒளி விழாவில் கலந்து கொண்ட பிள்ளைகளுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இறுதியில் எல்லோருக்கும் தேநீரும், சிற்றுண்டியும் வழங்கப்பட்டன.

தாரகை ஒளி

முடியத்தக்க வழியில் முயலாத முயற்சி பலர் கூடிப்பாதுகாத்தாலும் தவறுபடும்.

# உதயதாரகை

ஆதீன காரியாலயம், Estd. 1841 வட்டுக்கோட்டை

மலர்: 155 16 - 12 - 1994 இதழ்: 32


## வருகையின் காலம்

நமது ஆண்டவரின் வருகையைக் கொண்டாடும் காலம் வந்துவிட்டது!

பிரச்சினைகள் நமது நாட்டிலே தீர்ந்தபாடில்லை! சமாதானம் ஏற்படும் அறிகுறிகள் மெல்ல மெல்ல மறைந்து போய்க்கொண்டிருக்கின்றன! மீண்டும் போர்ச்சத்தம் மீண்டும் இராணுவ தளபாடக் குவிப்பு, மீண்டும் இராணுவக்கெடுபிடிகள். ஆண்டவர் பூலோகத்திலே பிறந்த பொழுது உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர் மேற்பிரியமும் என்று தேவதூதர்கள் பாடினார்கள். அந்தச் சமாதானத்திற்காக மனிதன் ஆவலோடு காத்திருக்கின்றான்.

ஆனால் இன்று உலகில் நடைபெறும் அனர்த்தங்களைப் பார்க்கும் பொழுது மனிதன் மீண்டும் காட்டு வாழ்க்கைக்குச் சென்று கொண்டிருக்கிறானா? என்ற கேள்வி எழுகின்றது. இந்த வருடம் ருவண்டாவில் நடைபெற்ற படுகொலைகளை நினைத்துப்பார்க்கின்ற பொழுது மனித ஜாதியே வெட்கித் தலை குனிய வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

முன்னேற்றம் எப்பொழுதும் செங்குத்தாக மேலே நோக்கிச் செல்வதில்லை என்பதனை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். முன்னேற்றம் ஒரு சுழற்சிப்படி போன்றது (Spiral) - சில வேளைகளில் முன்னேறுவதற்காக வந்த திசையில் திரும்பவேண்டியிருக்கிறது. இப்போதுள்ள சூழல் அப்படிப்பட்டதேயாகும்.

மனித சமுதாயம் முன்னேறிக்கொண்டே போகிறது; முன்னேறிக்கொண்டே போகும்; என்பது கிறிஸ்தவ விசுவாசம். சில அன்பர்கள் கடவுள் அன்பாகவேயிருக்கின்றார் என்றால் ஏன் இந்த அட்டூழியங்களை அனுமதிக்கின்றார்? எனக் கேட்கின்றனர்.

கடவுளின் வழிகள் விசித்திரமானவை நம்மால் விளங்கிக்கொள்ள முடியாதவை. ஆனால் அவர் பூவுலகத்தில் தமது திட்டத்தைச் சிறிது சிறிதாக நிறைவேற்றி வருகின்றார் என்பது நிச்சயம். உலகம் வெற்றியின் மேல் வெற்றிகளைப் பெற்றுக்கொண்டேயிருந்தது; இறைவனை மறந்து துன்பங்கள் மனிதனைக் கடவுளை நோக்கிப் பார்க்கும்படி தூண்டும் சக்திகள் கடவுட் கோட்பாட்டையே நிர்முலமாக்கி நாத்தீகத்தை நிலைநாட்ட முயன்ற சோவியத் ஒன்றியம் எவ்வாறு கடவுளிடத்திற்குத் திரும்பியது என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்,

துன்பங்களின் பின்னால் பளிச்சிடும் வெள்ளி கீறல்களையும் நாம் அவதானித்துப் பார்க்கவேண்டும். துன்பங்களின் மத்தியில் ஒளிவிடும், தியாகச்சுடர்கள் தன்னலமற்ற தொண்டர்கள், கண்ணீர் துடைக்கும் அன்பர்கள் எல்லோருமே கிறிஸ்துவின் இராஜ்யம் சமீபித்திருக்கிறது என்பதற்குக் கட்டியம் கூறிக்கொண்டேயிருக்கின்றார்கள். ஆகவே மனவுறுதியுடன் நாம் இந்த வருகையின் காலத்தில் உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர் மேற் பிரியமுண்டாவதாக என்று பாடலாம்.

## தமிழிசையும் கிறிஸ்தவமும்

கிறிஸ்தவ சமய சமூக ஆய்வு மன்றத்தினால் கடந்த அக்டோபர் 2ம் திகதி நடத்தப்பட்ட கருத்தரங்கில் உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி C. V. செல்லையா அவர்கள் வழங்கிய தலைமையுரையின் சுருக்கம்

சமயங்களுக்கும், கலைகளுக்கும் தொன்று தொட்டு நெருங்கிய தொடர்பு காணப்பட்டு வருகின்றது. நாம் இன்று காணும் பலவித கலைகளும் பெருமளவுக்குச் சமயத்தோடு சேர்ந்து வளர்ந்தவையே. காலம் கடந்து கலைகள் நிற்கவும் வளரவும் செழிக்கவும் சமயங்கள் உந்து சக்தியாகின்றன. கட்டிக்கலை சிற்பம், ஓவியம் முதலியன சமய வழிபாடுகளுடன் பின்னிப் பிணைந்து அழகியல் தழுவிய ஆக்கத்திறனுடன் வளர்ந்தன. ஆடுதல் பாடுதல் முதலியனவும் பல்வேறு பரிமாணங்களில் கால, தேசவர்த்தமானங்களுக்கு அமையவளர்ச்சி கண்டன.

இந்த வகையிலே நாம் ஒன்றை திடமாகக் கூறலாம். உலகிலே கலைகள், அதுவும் கவின்கலைகளைப் புறக்கணித்த எந்தமதமும் நீண்டகாலம் நிலைநிலைக்கவில்லை. அதே வேளையில் கலைகள் சமயத்தினை வளர்ப்பதற்குப் பயன்பட்டன என்பதும் உண்மையே.

உலக வரலாற்று ஓட்டங்களின் பின்னணியில் நோக்கும் போது கிறிஸ்தவ சமயம் பல்வேறு பண்பாட்டுத் தளங்களுடன் இரண்டறக் கலந்தமையும் பல் இன கலாசாரங்கள் இச் சமயத்தினுள் இயல்பாகவே இணைந்துள்ளமையும் நாம் காணலாம். கிறிஸ்தவம் எந்தக் கலாசாரத்துக்கும் ஏற்ற வாழ்வியல் அறநெறிகளில் பல்வேறு நுறைகளுடன் தன்னை இணைக்கும் சக்தி கொண்டதாக அமைகின்றமையையும் அவதானிக்கலாம். ஐரேப்பிய இனமொழி பண்பாட்டுக் கூறுகளிற் பலவற்றைக் கிறிஸ்தவம் தனதாக்கிக் கொண்டதுபோலக் காணப்படினும் அது எந்தவொரு பண்பாட்டு வட்டத்தினுள்ளும் தன்னை வரையறை செய்து கொள்ளாமல் பூரண பொதுமையுடன் வளர்ந்திருப்பதையும் மனங்கொள்ளவேண்டும். கலைத்துறையை நோக்குமிடத்துக், கிறிஸ்தவம் தனது அடிப்படைக் கோட்பாடுகளுக்கும் நோக்கத்திற்கும் மாறுபாடு இல்லாத வகையிலே கால தேச வர்த்தமானங்களுக்கேற்பக் கலைகளை உள்வாங்கியுள்ளது. தமிழிசையும் இதற்கு விதிவிலக்கல்ல.

கலைகள் சமய வழிபாட்டோடு நெருங்கிய தொடர்புடையன. எக் கலையினையும் எந்த ஒரு சமயமும் தனக்கு மட்டுமே உரியது என்று பெருமை பாராட்டக் கூடாது. கலைகளை எச்சமயத்துள்ளவர்களும் தமது சமயத்திற்கு ஏற்ப அமைத்து இன்புறலாம்.

பாரம்பரியத் தமிழ் இசைமரபுக்கும் இசைக்கருவிகளுக்கும் இசைவுபட்ட வகையிலே கிறிஸ்தவம் இசையை வளர்க்க ஆவல் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதே. கர்நாடக இசையையும் ஆலயங்களில் வழிபாட்டிற்குப் பயன்படுத்த முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. கர்நாடக இசையைப் பற்றிய முழுமையான ஞானம் இல்லாமையும், ஆயர்கள் குருமாரில் போதிய இசைத்தேர்ச்சி பெற்றவர்கள் இல்லாமையுமே வளர்ச்சியில் தாமதத்திற்குக் காரணம் எனலாம்.

எந்தநாட்டில் திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதோ அந்த நாட்டிற்குரிய கலைகளும் பண்பாடுகளும் வழிபாட்டுடன் இணையாதவரை அத்திருச்சபை முழுமையடைவது என்பது கடினமே. இறைவழிபாட்டினின்று இசையை அப்புறப்படுத்துவது இயலாத காரியம். வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள் தம்புருவோடும் நடனத்தோடும் துதியுங்கள்' என்று சங்கீதம் 150 இல் வாசிக்கின்றோம்.

சங்க இலக்கியங்களிலே பாணர் கூத்தர், விறலியர் முதலியோர் அரசவைச் சூழலிலே தம் கலைகளை வெளிப்படுத்தியதாகக் காண்கின்றோம். இப்பாணன் பாணிக்குச் சமதையான பண்புகளுடைய பல்வேறு இசைக்கலைஞர்களை நாம் பழைய ஏற்பாட்டிலே காண்கின்றோம். பாடுகிறவர்களும் ஆடுகிறவர்களும் கூட ஆராதனைகளுக்கு உதவியிருக்கிறதாக பழைய ஏற்பாடு கூறுகிறது. தாவீதுக்கு இஸ்ரவேலின் இனிய சங்கீதக்காரன் என்ற பட்டம் இருப்பதையும் காணலாம். வழிபாட்டு மரபுகளில் மாத்திரமன்றிக் கிறிஸ்தவத்தின் பல்வேறு அமிசங்களிலும் இசை செல்வாக்கைச் செலுத்தியுள்ளமையையும் அவதானிக்கின்றோம்.

## உப தலைவராகத் தெரிவு

கொழும்பில் நடைபெற்ற இலங்கைச் செஞ்சிலுவை சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையின் செயலாளராக இருந்து சிறப்பான பணியாற்றிய திரு. எஸ். சிவராஜலிங்கம் சங்கத்தின் உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# The Morning Star

Diocesan Office. Vaddukoddai 16 .12 . 1994


## EDITORIAL

### Tidings of Comfort and Joy

Oh' little town of Bethlehem how still we see thee lie above thy deep and dreamless sleep. The silent stars go by; yet in thy dark street shineth, thee everlasting light;

The hopes and fears of all the years are met in thee tonight.

The past ten years had been a period of anxiety and frustration in our country. As the season of Christmas approaches we look into the past and try to recall whether there was any streak of hope at any time. But we must remember that we are not living in a world entirely controlled by human beings. We are living in God's world.

The message of Christmas is that in this Word of God inspite of the dire happenings we can see a gleam of light that falls upon the world. That gleam is fraught with tidings difficult to believe, but the tidings which have given rise to the Christian religion and has kept it alive, through all its vicissitudes of disaster and misfortunes that have haunted the past few centuries. The tidings signify that God in his great goodness and mercy became man and lived in this world. God cares so much for man that he himself came down to this world and lived among us. Therefore, will not we fear, though the earth be removed and though the mountains be carried into the midst of the sea.

"The Word became flesh and dwelt amongst us" was the testimony of St. John the Evangelist. This was impossible for the Greeks, but this was the essence of Christianity. The Lord came down to live amongst us, partake in our struggles and sufferings and see our temptations.

Aerial bombardment and shellings may continue but the Lord also has come to be with us for ever and ever. It is like the experience of the frightened mother and her small children whose breadwinner had gone to Saudi Arabia for employment. One day they reveived a letter from the father that he had finished his assignment in Saudi Arabia, earned enough money and was returning home to be with the wife and children for ever and ever. The battle may continue with more ferocity. But the father is going to be with the family during the perilous time. He will know what has to be done in a time of calamity. This is the message of Christmas—The hopes and fears of all the years are met in Bethlehem.

Our future can be said to be assured inspite of the seeming darkness around us.

### Obituary Rasaiah David Thanabalasingam

We regret to record the death of R. D. Thanabalasingam at the age of 62 on 5th December 1994. He was supervisor of Works and the Boarding Department of Jaffna College for several years and retired in 1988.

The funeral took place on 6th December 1994 at his residence. The service was conducted by the Revd. A.A. Paul, assisted by the Revds V. N. Tharmakulasingam, S. P. Jeyasingam and Benjamin Jeyarajah. The Sermon was preached by the Rev. A. Jeyakumaran and tributes paid by Mr. A. Kadirgamar a former Principal of Jaffna College and the Rev A. A. Paul, Co-Vice Principal of Jaffna College.

Mr. Thanabalasingam was a son of late Mr.& Mrs. T.Rasaiah of Vaddukoddai. He leaves behind, besides his beloved wife Rose Ariamalar, daughter Mrs. Jeyanthini Mithiraranjan, teacher Jaffna College, sons James Amirthapalan, Reginold Anjugapalan & Dennis Atputhapalan, and three grand children. His son Reginold Ariapalan predeceased him.

### Letter to the Editor......

(Continued from page 1)

on account of his intellectual stature. No doubt, at the end of the year, the students realised the wisdom of Dr Harrison's action as they felt that they were well equipped to face the examination.

Dr. Harrison was proficient in Tamil and in teaching Latin grammar and construction, he quoted profusely from Tamil language.

Dr. Harrison never used the blackboard in his teaching He was so confident of his oral efficiency that he was indifferent to the blackboard. This is quite contrary to the teaching method of Rev John Bicknell. He relied exensively on the blackboard for his teaching and on entering a classroon the first thing he did was to clean the blackboard.

Dr. Harrison used to teach from a standing position during the entire period. This made his teaching very effective. Also it may be surmised that he was so engrossed in his teaching, that he failed to notice the teacher's chair.

He used to walk about with a stoop and head bent down and people used to remark that this was due to the weight of his intellect.

He was a man of few words and as Principal or Teacher he was always affable, courteous and kind. He won the hearts of all his students and the saying attributed to Julius Caesar "Veni, Vide, Vice" aptly fits Dr. Harrison.

Yours faithfully,

P. J. Thambiratnam

Ex. S. L. Govt. Accountants' Service

### Thanksgiving......

(Continued from page 1)

true witness to Our Lord by his untiring service to Him. He holds a record in the Y.M.C.A. with his 25 years of devoted service to God Even after he was pronounced sick, with a heart ailment, he did not waive from his commitment to his service to God and the suffering people. This was witnessed by the large numbers who turned up at his funeral service and at the Service of Thanksgiving. He mentioned about the numerous conferences and workshops Mr Thambithurai had attended in foreign countries. He represented several N. G. Os., Boards and Committees of the Diocese, Treasurer and Committee Member of Uduvil Church and also a member of the Select Committee in the election of our new Bishop. The sermon was preached by the Rt. Rev. Dr. S. Jebanesan who at the conclusion mentioned about the life and involvement of Mr. Thambithurai to the Jaffna community and the Diocese. He had been working very hard for the people of the war torn Jaffna. He had made several trips to Colombo during the height of the war to look to the needs of the suffering people. He is a person who was very simple and consistant in character. The Christian Theological Seminary choir rendered a special hymn. The litany was led by Rev. B. J. Mather (a nephew of Mr. Thambithurai). The service came to a close with benediction pronounced by the Rt. Rev. Dr. S. Jebanesan The service was well attended by people from all parts of the Peninsula. The Church was full. Everyone present was invited for Tea by the family members of Mr. Thambithurai at the Uduvil Girls' College Hall

### OBITUARY Mrs. Brigadier Mercy David

Death occured in Colombo of Mrs. Mercy David, Rtd. Brigadier of Salvation Army, after a brief illness on 17th November, 1994. She was 74 years old. She leaves behind four sons and two daughters of whom three are attached to the Salvation Army. A Memorial Service, presided over by Captain Kokilla of Kaithady was held at her son Wesley David's residence, Church Road, Chankanai on 24th November, 1994.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka under No. Q/J/140/94. News Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press. 182, 1st Cross Street, Jaffna on Friday the 16th of December and published by Mr. T. A. Tambiappa, Diocesan Office, Vaddukoddai.